16.10.2025

STC.62/2021

எதிரி தரப்பில் குவிமுச 315 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

DW–1, கண்ணன் த/பெ.பொன்னையா

**எதிரி தரப்பில் முதல் விசாரணை**

நான் காமராஜர்புரம் வடபகுதியில் குடியிருக்கிறேன். மனுதாரர் எனக்கு 25 வருடமாக பழக்கம். அவர் வட்டார பிரதிநிதியாக ஒரு அரசியல் கட்சியில் இருந்து வந்தார். நானும் அதே கட்சியில் உறுப்பினராக இருந்து வந்தேன். அந்த சமயத்தில் கட்சி கூட்டம் நடந்தது. அதனால் அனைவரும் செலவுகளை ஏற்றுக்கொண்டோம். என் பங்குக்கு ரூ.10000/– ஏற்றுக்கொண்டேன். எனக்கு அப்போது தொகை இல்லாததால் பூர்த்தி செய்யப்படாத காசோலையை நிர்வாகம் செய்பவரிடம் கொடுத்தேன். அதன் பிறகு பணம் வந்ததும் பணத்தை கொடுத்துவிட்டு நான் காசோலையை கேட்கும் போது நிர்வாகம் தருவதாகசொன்னார்கள். இதற்கிடையில் அலுவலகத்தை மூடிவிட்டார்கள். அதன் பிறகு அலுவலகம் மாறியதால் காசோலை எங்கு போனது என்று தெரியவில்லை என்று நிர்வாகத்தினர் என்னிடம் சொன்னார்கள். நான் காசோலையை கேட்டுக்கொண்டே இருந்தேன். அதற்குள் எனக்கும் மனுதாரருக்கும் கட்சி அலுவலகத்தில் வாக்குவாதம் ஏற்பட்டது. நானும் நன்னம்பிக்கையின் பேரில் இருந்துவிட்டேன். அதன் பிறகு ஒரு வருடம் கழித்து பார்த்தால் மனுதாரர் என் மீது வழக்கு போட்டார். அதன் பிறகு தான் நான் ரூ.1,50,000/– வாங்கியிருந்ததாக வழக்கு போட்ட விபரம் தெரியவந்தது.

**புகார்தாரர் தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**